DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED
UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM

**Spl.Sessions Case No.12/2020**

அ.சா.10

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | கார்த்திகேயன் | Caste: | |
| Father's Name: | சங்கர் | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 17.10.2023.

(A2, A7 absent. Petition u/s. 317 Crpc filed and allowed. Other accused present.)

<u>முதல் விசாரணை</u>

எனது சொந்த ஊர் தெற்கு காட்டுர் கிராமம். நான் தற்போது இராமநாதபுரம் பாரதிநகர் காலாங்கரை தெருவில் இருந்து வருகிறேன். தற்போது நீதிமன்றத்தில் இருக்கும் 1வது எதிரி பாலா என்ற பாலமுரளிகிருஷ்ணாவை எனக்கு தெரியாது. எனக்கு மோகனப்பிரியா எனும் தங்கை உள்ளார். என் தங்கை மோகனப்பிரியா சம்பவ காலத்தில் இராமநாதபுரம் ஓம்சக்தி நகரில் குடியிருந்தார். அவர் கணவர் பெயர் தர்மராஜ். என் தங்கை கடந்த 2018ல் மதுரை ரோட்டில் உள்ள PEE YES YEM HK Motors LLP Hyundai நிறுவனத்தில் ஒரு வெள்ளை நிற Hyundai Creta கார் பதிவு செய்திருந்தார் என்பது தெரியும். அந்த வாகனத்திற்காக HDFC வங்கியில் 225000 ரூபாய் முன்பணம் செலுத்தி 1000000 ரூபாய் கடன் பெற்று என் தங்கை பெயரில் வாங்கினேன் என்றால் சரிதான். அந்த கார் 13.04.2018 அன்று Delivery எடுக்கப்பட்டது. அன்றுமுதல் அதை

நான்தான் பயன்படுத்தி வந்தேன். 2020 மார்ச் கொரானா காலத்திற்கு முன் பாரதிநகரில் உள்ள " Out Look Mens Wear " என்ற துணிக்கடைக்கு வெளியே நிறுத்திவிட்டு நான் சாத்தூர் சென்றுவிட்டேன். இரண்டு நாட்களுக்கு பின் அந்த துணிக் கடையில் இருந்து போன் செய்து இரண்டு நாட்களாக அந்த வண்டி நிற்பதால் சந்தேகத்தின் பேரில் போலிசார் அதை எடுத்து சென்றுள்ளார்கள் என்று சொன்னார்கள். அதன் ஆவணங்கள் இல்லாததால் அந்த வண்டியை காவல்நிலையத்தில் இருந்து மீட்க முடியவில்லை. இதுசம்பந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி மேற்சொன்ன சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை:–**

போலிஸ் விசாரணையில் கார் வாங்கியதற்கான மாதத் தவணைகளை என்னால் செலுத்த முடியவில்லை என்பதால் 2019ம் வருடம் 1வது எதிரி பாலா என்ற பாலமுரளிகிருஷ்ணாவிடம் விற்றுவிட்டேன் என்றும், அந்த காரை எதிரி பாலா பதிவு செய்யாமல் ஓட்டி வந்தார் என்றும், அந்த காரை வைத்துதான் 21.03.2020 அன்று அரவிந்தன் என்பவரை சக்கரவாளநல்லூர் பஸ்ஸ்டாப்பில் வைத்து இருசக்கர வாகனத்தின் மீது மோதி கொலை செய்துவிட்டார்கள் என்று கேள்விப்பட்டதாக சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் என் நண்பர்கள் என்பதால் உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** – இல்லை

Sd/- B.C.Gopinath
Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)